இலங்கை வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகள் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆம் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முன்னாள் நிதி அமைச்சரின் கட்டளையொன்றின் மூலம் குறித்த நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி ஐஐ இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கி மற்றும் தொகுதியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் மீதாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(i)	**நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மேம்பாட்டுப் பகுதிகள்.**		
அ.	வங்கியானது சிக்கலான, துண்டு துண்டான GL அமைப்பைக் கொண்டுள்ளது. நான்கு தனித்தனி	மேலும் மேம்படுத்துவதற்கான கருத்து கவனிக்கப்பட்டது. வங்கி தற்போதுள்ள நடைமுறையைச் சீராக்கும்	கைமுறையான சரிசெய்தல்களைக் குறைப்பதற்கான நடவடிக்கை

	GLகளை (DBU, FCBU, மாலைத்தீவு மற்றும் பிற வெளிநாட்டுக் கிளைகள்) Excel மூலம் கைமுறையாக ஒருங்கிணைத்து, இறுதிப் புள்ளிவிவரங்களை உருவாக்குவதற்காகப் பேரேட்டு இருப்புகளில் அதிக எண்ணிக்கையிலான கைமுறைச் சரிசெய்தல்கள் செய்யப்படுகின்றன.	பணியில் உள்ளது.	எடுக்கப்பட வேண்டும்.
ஆ.	அனைத்து மீதிகளுக்கான ஐந்தொகை இணக்கம் மற்றும் உறுதிப்படுத்தல் செயல்முறைக்கான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கையை வங்கி கொண்டிருக்கவில்லை. சில மீதிகளுக்கான இணக்கச் செயல்முறை இருந்தாலும், அவை சரியான நிதிக்கூற்றுக்களின் வரிசை உருப்படியின் (FSLI) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதிலும் பார்க்க அது எண்ணிக்கை மீதிகளை இணக்கஞ்செய்வதில் அதிக கவனம் செலுத்துகிறது.	கருத்து அவதானிக்கப்பட்டது. இது நிதிக்கூற்றுக்களின் மூடல் செயல்முறை அல்லது GL உரிமையாளர் ஆவணத்தில் தேவைப்பட்டால் 2025 திசெம்பர் 31க்குள் இணைக்கப்படும்.	அனைத்து மீதிகளுக்குமான ஐந்தொகை இணக்கம் மற்றும் உறுதிப்படுத்தல் செயல்முறைக்கான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை தேவைப்படுகின்றது.
இ.	GL கணக்குகள் யாருக்குச் சொந்தம் என்பதற்கான ஆவணப்படுத்தல் இல்லாமை. GL கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக உரிமையாளர்களின் ஆவணப்படுத்தப்பட்ட பட்டியலை வங்கி கொண்டிருக்கவில்லை. அந்தந்த குறிப்புகளின் பொறுப்பாளர்களை (தயாரிப்பவர் மற்றும் அங்கீகரிப்பவர்) முகாமைத்துவம் அடையாளம் காண்பது இன்றியமையாதது.	கருத்து அவதானிக்கப்பட்டது. GL உரிமையாண்மை ஆவணப்படுத்தல் செய்முறையிலுள்ளது. இது தொடர்பிலான FSCP கைய்முறை செய்முறையும் 2026 மார்ச் 31 அளவில் நாளதுவரையாக்கப்படும்.	GL உரிமையாண்மை கொள்கையொன்று அமுல்படுத்தப்பட வேண்டும்.
ஈ.	GL இல் உள்ளிடப்பட்ட கைமுறைப் பதிவுகளுக்கான மத்திய கண்காணிப்பு செயல்முறைகள் கிடைக்கப்பெறாமை. கிளை மட்டத்தில் GL கணக்குகளில் அதிக ரூபாய் மதிப்புள்ள அதிக எண்ணிக்கையிலான கைமுறைப் பதிவுகள் உள்ளிடப்படுகின்றன, மேலும் இந்தக் கைமுறைப் பதிவுகளுக்கு மத்திய கண்காணிப்பு செயல்முறை எதுவும் இல்லை.	ஒவ்வொரு மாத இறுதிக்குப் பிறகு கிளையால் உள்ளிடப்பட்ட கைமுறைப் பதிவுகளுக்கு, அந்தந்த கிளை மேலாளரிடமிருந்து உறுதிப்படுத்தலைப் பெறுவதற்கான பொறிமுறையை உருவாக்குவோம். கூடுதலாக, கிளை ICOக்கள் அவற்றின் வழக்கமான வேலைகளின் ஒரு பகுதியாகக் கைமுறைப் பதிவுகளைச் சரிபார்க்க அறிவுறுத்தப்பட்டனர்.	கைமுறைப் பதிவுகளுக்கான மத்திய கண்காணிப்பு செயல்முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
உ.	கிளைகளுக்கு இடையே GL கணக்கில் கைமுறைப் பதிவுகளை அனுப்புவதில் சரியான கட்டுப்பாடுகள் இல்லாமை. ஒரு கிளை மற்றொரு	ஒரு வணிகக் காரணம் இருப்பதால் தற்போதுள்ள சலுகையை நிறுத்தி வைக்க முடியாது.	கைமுறைப் பதிவுகளுக்கான மத்திய கண்காணிப்பு

	கிளைக்கான பொதுப் பேரேடு (GL) இல் தேவையான அனுமதிகளைப் பெறாமலேயே கைமுறைப் பதிவுகளை உள்ளிடும் திறன் கொண்டது.	ஒவ்வொரு மாத இறுதியில் கிளையால் உள்ளிடப்பட்ட கைமுறைப் பதிவுகளுக்கு, அந்தந்த கிளை மேலாளரிடமிருந்து உறுதிப்படுத்தலைப் பெறுவதற்கான பொறிமுறையை உருவாக்குவோம். கூடுதலாக, கிளை ICO க்கள் அவற்றின் வழக்கமான வேலைகளின் ஒரு பகுதியாகக் கைமுறைப் பதிவுகளைச் சரிபார்க்க அறிவுறுத்தப்பட்டனர்.	செயல்முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
ஊ.	ஆபத்து முகாமைத்துவத்திற்கான குழு நிலை வெளியிடல்கள் வெளியிடாமை வங்கியுடன் தொடர்புடைய ஆபத்து முகாமைத்துவ மற்றும் நியாயமான மதிப்பு வெளியிடல்களை மட்டுமே வங்கி வழங்கியுள்ளது, மேலும் குழு நிலை தொடர்பான வெளியிடல்கள் வழங்கப்படவில்லை.	அதற்கேற்ப வெளியிடல் கொள்கை உருவாக்கப்படும். ஆபத்து முகாமைத்துவம் தொடர்பான முக்கியமான வெளியிடல்கள் 31.12.2025க்குள் குழு மட்டத்தில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.	பொருத்தமான கொள்கைகளை உருவாக்கவும் மற்றும் தொடர்புடைய வெளியிடல்களைச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) அ.	**காலக்கழிவு உள்ளடங்கலாக கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பிலான முன்னேற்ற விடயங்கள்** மாற்றி அமைக்கப்பட்ட கடன் வசதிகளை அடையாளம் காணுதல் ஒரு கடன் வசதியை நிலுவையுடன் மாற்றி அமைக்கும்போது வங்கி புதிய வசதிக்காகப் கடந்த நாட்களின் தாமதத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லவில்லை. சிறந்த நடைமுறையின்படி மாற்றி அமைக்கப்பட்ட வசதிகளுக்கான கடந்த நாட்களின் தாமதத்தை வங்கி முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும்.	அவதானிக்கப்பட்டது. வசதியின் தொடர்புடைய நிலை DPD அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது. வசதிகள் மாற்றி அமைக்கப்படும்போது, மாற்றி அமைக்கப்பட்ட வசதி, மாற்றி அமைப்பதற்கு முன் இருந்த மூலதன வசதியின் நிலுவை நிலையை கருத்தில் கொண்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (cooling off period) தொடர்புடைய நிலையில் வைக்கப்படும். குளிரூட்டும் காலத்திற்குப் பிறகு, ஒப்புக்கொண்ட விதிமுறைகளின்படி வசதியின் திருப்பிச் செலுத்துதலைப் பொறுத்து, அந்த வசதியை மீண்டும் வகைப்படுத்தலாம்	சிறந்த நடைமுறையைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
ஆ	கடன் மாற்றியமைப்பிற்கான சுயாதீன சரிபார்ப்பு செயல்முறை இல்லாமை. கடன் மாற்றியமைப்பிற்கான சுயாதீன சரிபார்ப்புச் செயல்முறைக்கு போதுமான பொறிமுறையை வங்கி கொண்டிருக்கவில்லை. கடன் மோசமடைவதற்கான அறிகுறிகளைக் காட்டும் சில கடன்கள் வணிகக் காரணங்களின் அடிப்படையில் நிலை 1 (செயல்படும்) வசதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.	இந்த நோக்கத்திற்காக கிளை ICO களின் உதவியுடன், கடன் மாற்றியமைப்பிற்கான சுயாதீன சரிபார்ப்பு செயல்முறையைப் பெறுவதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை வங்கி ஆராயும்.	கடன் மாற்றியமைப்பிற்கான சுயாதீன சரிபார்ப்பு செயல்முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(iii) அ	**கடன் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான மேம்பாட்டுப் பகுதிகள்.** இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2021 இன் 13 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் வழிகாட்டுதல் பந்தி 11.1.2 இன் படி, வங்கியின் இடர் முகாமைத்துவத் திணைக்களம் மட்டுமே மீண்டும் அட்டவணைப்படுத்தப்பட்ட மற்றும் மாற்றி அமைக்கப்பட்ட வசதிகளை மேம்படுத்த அனுமதிக்கிறது. கணக்காய்வின்போது, கூட்டு காலக்கழிவுக் கொள்கையின் கீழ் உள்ள மாற்றி அமைக்கப்பட்ட மற்றும் மீண்டும் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன் வசதிகளை மேம்படுத்த வங்கி ஆபத்து முகாமைத்துவத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதில்லை என்று அவதானிக்கப்பட்டது.	கருத்து அவதானிக்கப்பட்டது. IFRS அறிக்கையிடல் அமைப்பில் பயன்படுத்தப்படும் மாதிரி/பொறிமுறையானது, கூட்டுக் காலக்கழிவின் கீழ் மாற்றி அமைக்கப்பட்ட மற்றும் மீண்டும் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன் வசதிகளை மேம்படுத்துவதற்காகக் கிடைக்கிறது. அந்தந்த (அதிகாரப்பூர்வ அறிவுறுத்தல் சுற்றறிக்கை - OIC 60/2021) இல் குறிப்பிடப்பட்டுள்ள புறநிலை அளவுகோல்களுடன் இது இணங்குகிறதா என்பதை சுயாதீனமாகச் சரிபார்க்க ஏற்பாடுகள் செய்யப்படும்.	இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட வழிகாட்டுதலைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(iv)	**தரவுக் களஞ்சியம் இல்லாமை** நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் நோக்கத்திற்காக வங்கி பல திணைக்களங்களிடமிருந்து தரவுகளைப் பெற வேண்டியுள்ளது, மேலும் தரவைப் பெறுவதற்கு ஒரே தரவுப் புள்ளி எதுவும் கிடைக்கவில்லை.	வங்கியின் நிர்வாகம் ஒரு மத்தியப்படுத்தப்பட்ட நிறுவனத் தரவுக் களஞ்சியத்தை நிறுவுவதற்கு அனுமதி அளித்துள்ளது, மேலும் அதற்கான ஆயத்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது 31.12.2025க்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.	மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் களஞ்சியத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(v)	**கிளைகளுக்கு இடையேயான மீதிகளை இணக்கஞ் செய்வதற்கான தானியங்கி செயல்முறை இல்லாமை** வங்கி தற்போது கையேடு மூலமாகவே வன் பிரதி ஆவணங்களைப் பயன்படுத்தி, ஒவ்வொரு கிளைக்கும் தனித்தனி வேலைத் தாள்களைப் பராமரித்து, கிளைகளுக்கு இடையேயான மீதிகளை இணக்கஞ் செய்து வருகிறது. இதன் விளைவாக, கணக்காய்வு நேரத்தில் முழு வங்கியின் கிளைகளுக்கு இடையேயான நிலுவைகளின் ஒருங்கிணைந்த சமரச அறிக்கையை வங்கியால் வழங்க முடியவில்லை. மேலும், கிளைகளுக்கு இடையேயான மீதிகளை இணக்கஞ் செய்து முறையான மறுஆய்வு செயல்முறை எதுவும் நடைமுறையில் இல்லை என்றும் அவதானிக்கப்பட்டது. ஒரு தானியங்கி மற்றும் மத்தியப்படுத்தப்பட்ட சமரச	''மத்திய அலுவலகம் எங்கள் கணக்கு/கிளைகளுக்கு இடையேயான கணக்கு செயல்பாட்டை நிறுத்துவதற்கான சாத்தியக்கூறு தற்போது பரிசீலனையில் உள்ளது, மேலும் இது குறித்த விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. நிறுத்துவது சாத்தியமில்லை என்றால், ''மத்திய அலுவலகம் எங்கள் கணக்கு/கிளைகளுக்கு இடையேயான கணக்கை'' தானியங்குமயமாக்கும் செயல்முறை 2025 ஆம் ஆண்டிற்குள் தொடங்கப்படும்.	கணக்காய்விற்குத் தேவையான விவரங்களை வழங்கவும் மற்றும் கிளைகளுக்கு இடையேயான மீதிகளை இணக்கஞ்செய்வதற்கு ஒரு முறையான மீளாய்வுச் செயல்முறையை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	செயல்முறை இல்லாதது, அத்துடன் சுயாதீன மறுஆய்வு இல்லாதது, நிதிப் பதிவுகளில் பிழைகள், தாமதங்கள் மற்றும் சாத்தியமான தவறான அறிக்கைகள் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது.		
(vi)	காலக்கழிவு ஏற்பாடுகளைக் கணக்கிடப் பயன்படுத்தப்படும் அமைப்பில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் 2024 திசெம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தனிநபர் மற்றும் காலக்கழிவுக் கணக்கீடு இரண்டிற்கும் அமைப்பில் உள்ள சிக்கல்கள் காரணமாக 283 கடன் ஒப்பந்தங்கள் ரூபா. 271 மில்லியன் தொகைக்கு, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. வங்கி இந்த கணக்கீடுகளை ஒரு தனி அமைப்பின் மூலம் தானியங்குமயமாக்கியுள்ளது. இருப்பினும், மேலே குறிப்பிட்ட சிக்கல்கள் மற்றும் முந்தைய ஆண்டின் அவதானிப்புகள் காரணமாக, அதிக சிக்கல் நிறைந்த இந்த கணக்கீடுகளை வங்கி கையால் செய்துள்ளது.	கருத்து அவதானிக்கப்பட்டது. இந்தச் செயல்முறை முழுமையாகத் தானியங்குமயமாக்கப்படும் வரை, இது கையாளப்பட வேண்டியிருக்கும். இருப்பினும், அனைத்து கடன் ஒப்பந்தங்களும் கைப்பற்றப்பட்டுள்ளஎன்பதை உறுதிப்படுத்த கையால் சரிபார்க்கும் முறை நிறுவப்பட்டுள்ளது. தானியங்குமயமாக்கல் செயல்பாட்டுடன் சேர்ந்து, 31.12.2025 க்குள் மேம்பாடுகள் செய்யப்படும்.	இந்தச் சிக்கலைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(vii)	**கிளைகளுக்கிடையேயான பொதுப் பேரேட்டுக் கணக்குகள்** கிளைகள் தங்களின் கிளைகளுக்கிடையேயான கணக்குகளுக்கும், தத்தமது செலவு மையங்களின் கீழ் உள்ள ”மத்திய அலுவலகம் - நமது கணக்கு” கணக்குக்கும் இடையிலான வேறுபாடுகளைச் இணக்கஞ்செய்ய வேண்டியது அவதானிக்கப்பட்டது. இருப்பினும், பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன: • சில கிளைகள் குறிப்பிட்ட மாதங்களுக்கான இணக்கங்களைச் செய்யவில்லை. • இணக்கஞ் செய்தலில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக, இணக்கஞ்செய்யப்படாத மீதிகள் பல காலங்களாகத் தொடர்ந்தன. சரியான நேரத்தில் இணக்கங்களைச் செய்யாதது நிதி அறிக்கையிடலில் பிழைகள், தவறான அறிக்கைகள் மற்றும் சரிசெய்யப்படாத வேறுபாடுகளுக்கான அபாயத்தை அதிகரிக்கிறது.	கருத்து ஏற்கப்பட்டது. பிழைகளின் அபாயத்தைக் குறைக்க, ”மைய அலுவலகம் - நமது கணக்கு” கணக்கைத் தொடராமல் நிறுத்துவதற்கான சாத்தியக்கூறு தற்போது பரிசீலனையில் உள்ளது, இது குறித்து விவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இதற்கிடையில், அனைத்துக் கிளைகளும் தங்கள் இணக்கக் கூற்றுக்களை கணக்குத் துறையின் மாதாந்திர நினைவூட்டல் கடிதங்கள் மற்றும் வழக்கமான பின்தொடர்தல் அழைப்புகளின் ஆதரவுடன் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.	கிளைகளுக்கிடையேயான பொதுப் பேரேட்டுக் கணக்குகளை முறையாகச் இணக்கஞ் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(viii)	**கடன் அட்டை நடவடிக்கைகள்** பயண அட்டை		
அ.	வங்கி, பயண அட்டை தொடர்பான 22312015 என்ற பொதுப் பேரேட்டுக் கணக்கிற்கு(GL) போதுமான இணக்கங்களை பராமரிக்கவில்லை. சரியான இணக்கம் இல்லாதது, இந்தக் கணக்குடன் தொடர்புடைய நிதி அறிக்கைகளின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மை குறித்து கவலைகளை எழுப்புகிறது.	பயண அட்டை மேலாண்மை அமைப்பு ஒரு கிளவுட் அடிப்படையிலானது ஆகும். இது வங்கியின் உள் கணக்கு அமைப்புடனும் பொதுப் பேரேடுகளுடனும் இணைக்கப்படவில்லை. எனவே, பயண அட்டை ஏற்றும் பொதுப் பேரேட்டுக் கணக்கு 22312015-ஐ இணக்கஞ்செய்ய நாங்கள் கையேடு செயல்முறையைப் பின்பற்றுகிறோம். இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அட்டவணை, பயண அட்டை மேலாண்மை அமைப்பிலும், பொதுப் பேரேட்டுக் கணக்கிலும் உள்ள தொகைகளை ஒப்பிட்டுப் பார்க்க மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. நிறுவன முகாமைத்துவக் குழுவின் அனுமதியுடன், இணக்கச் செயல்முறையை தானியங்குமயமாக்கும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இந்தத் செயற்திட்டம் 2026 ஏப்ரல் 30, க்கு முன்னர் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.	உரிய பொதுப் பேரேட்டுக் கணக்குகளை முறையாகச் இணக்கஞ் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
ஆ.	**CEFT மற்றும் ATM பரிவர்த்தனைகளுக்கான இணக்கஞ்செய்தல் செய்முறையில் இணங்காணப்பட்ட முக்கிய குறைபாடுகள்.** Lanka Pay வழியாகச் செய்யப்படும் CEFT மற்றும் ATM பரிவர்த்தனைகளுக்கு சரியான இணக்கஞ்செய்தல் செயல்முறை இல்லை. அதன்படி, 2024 டிசம்பர் 31, நிலவரப்படி CEFT பரிவர்த்தனைகள் தொடர்பான 04 பொதுப் பேரேட்டுக் கணக்குகளுக்கும் இணக்கஞ்செய்தல் ஆவணங்களுக்கும் இடையில் ரூபா. 597 மில்லியன் வேறுபாடும், ATM பரிவர்த்தனைகள் தொடர்பான 04 பொதுப் பேரேட்டுக் கணக்குகளுக்கும் இணக்கஞ்செய்தல் ஆவணங்களுக்கும் இடையில் ரூபா. 52.7 மில்லியன் வேறுபாடும் கண்டறியப்பட்டது. ஒரு சரியான தினசரி இணக்கஞ்செய்தல் செயல்முறை இல்லாதது, உள் மோசடி	புதிய CEFT ஸ்விட்ச் செயல்படுத்தலுடன், ஒரு தானியங்கி இணக்கஞ்செய்தல் தொகுதியானது செயல்படுத்தப்படும். பரிவர்த்தனை பெறுநரின் சரிசெய்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது மற்றும் வணிகக் குழுவால் தீர்வுப் பதிவைக் கண்டுபிடிக்க முடிந்தது. விதிவிலக்கான உருப்படிகளைக் கண்டறிதல் மற்றும் பதிவின் தானியங்கிமயமாக்கல் தற்போது உருவாக்கத்தில் உள்ளது. வழங்குநரின் இணக்கஞ்செய்தல் உருவாக்கத்தில் உள்ளது மற்றும் CEFT வழங்குநர் செயல்படுத்தலுக்கு	CEFT மற்றும் ATM இணக்கஞ்செய்தல் செயல்முறையை முறையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	மற்றும் பிழைகளுக்கான குறிப்பிடத்தக்க அபாயத்தை உருவாக்குகிறது, இது வங்கியின் நற்பெயரைக் கெடுக்கும்.	இணக்கஞ்செய்தல் செயல்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.	
இ.	**கடன் அட்டை** கடன் அட்டை தினசரி மீதி அசைவு அறிக்கை 2021 ஏப்ரல் முதல் ஒரு தவறான பூச்சிய ஆரம்ப மீதியாக பிரதிபலிக்கிறது, இதன் விளைவாக அறிக்கையிடப்பட்ட நிலுவைகளில் தொடர்ச்சியான முரண்பாடு ஏற்படுகிறது. இந்தச் சிக்கல் இன்றுவரை சரிசெய்யப்படவில்லை, மேலும் மதிப்பிடப்பட்ட நிதியியல் தாக்கம் அண்ணளவாக ரூபா.5 பில்லியன் ஆகும். ஒரு தற்காலிகத் தீர்வாக, முரண்பாட்டைக் கணக்கிடுவதற்கு அறிக்கையின் நிலுவையைச் சரிசெய்வதன் மூலம் தினசரி மூலதனக் கலவையை இணக்கஞ்செய்தல் கையேடு மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.	கருத்து ஏற்கப்பட்டது. பயன்பாட்டு விற்பனையாளரான TSYS கார்ட் டெக் லிமிடெட்டமிருந்து தீர்வு பெறப்பட்டுள்ளது. பேட்ச் வெளியீடு UATஇல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இடைவெளிகள் கவனிக்கப்பட்டதால், பயன்பாட்டு விற்பனையாளருடன் தொடர்ச்சியான விவாதம் நடந்து வருகிறது.	இணக்கஞ்செய்தல் செயல்முறையை முறையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
ஈ	திரும்பப் பெறப்பட்ட கடன் அட்டைகள், பௌதீக அட்டை அழிக்கப்படுவதற்கு முன்னர் கடன் அட்டை முகாமைத்துவ அமைப்பில் நிறுத்தப்படுவது அல்லது ரத்து செய்யப்படுவது இல்லை. இது உள் மோசடிகளுக்கு வழிவகுக்கும், மேலும் புதுப்பித்தல் திகதியில், தேவையற்ற முறையில் அதே அட்டை புதுப்பிக்கப்படும்.	கவனிக்கப்பட்டு, 31.05.2025 நிலவரப்படி சரிசெய்யப்பட்டது.	திரும்பப் பெறப்பட்ட கடன் அட்டைகள், பௌதீக அட்டை அழிக்கப்படுவதற்கு முன்னர் கடன் அட்டை முகாமைத்துவ அமைப்பில் நிறுத்தப்பட வேண்டும் அல்லது ரத்து செய்யப்பட வேண்டும்

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட்டி துணைக்கம்பனி உரிமைக்கோரல் கணக்குகளில் நீண்டகால நிலுவை மீதிகள் அத்தகைய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் காணப்பட்டன.	<u>**வைப்பு**</u> கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளப்பெற வேண்டிய தொகைகள் குறித்து வங்கி நிதியமைச்சகத்துடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளது. அமைச்சகத்தால் அவ்வப்போது பணம் செலுத்தப்பட்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டிலும், மூத்த குடிமக்களின் வைப்புகளுக்கான வட்டி ஈடுசெய்தல் மீளப்பெற	நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வட்டி மானிய கோரிக்கைத் தொகைகளைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தயாரிப்பு வகை	GL குறியீடு	2024.12.31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள வட்டி (ரூபா. '000')	பெறவேண்டிய வட்டியின் வயதுப் பகுப்பாய்வு ((ரூபா. 000) 03 மாதங்களிற்கு கீழ்	03 - 06 மாதங்களிற்கு இடைப்பட்டது	06 - 12 மாதங்களிற்கு இடைப்பட்டது	01 - 02 ஆண்டுகளிற்கு இடைப்பட்டது	02 ஆண்டுகளிற்கு மேற்பட்டது
வைப்பு							
விசேட வைப்பு கணக்குகளுக்கு பெறப்பட வேண்டிய ஊக்குவிப்பு வட்டி	11310600	268,664	59,535	31,020	64,770	113,339	-
ஊக்குவிப்பு மீள்நிரப்பல் பெறவேண்டிய சிரேஷ்ட பிரஜை	11310566	13,108,450	-	-	-	2,278,823	10,829,627
கடன்கள்							
எண்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா	51501021	501,539.30	64,041.67	71,871.61	26,334.03	222,308.40	116,983.59
தியவர திரிய	51501018	14,953.78	1,746.38	1,952.72	4,574.02	6,680.65	-
STaRR செயற்திட்டம்	51501018	2,654.07	746.11	888.90	1,019.06	-	-
NCRCS	51501006	439,250.29	240,418.11		66,207.43	132,624.74	-

வேண்டிய கணக்கிற்காக ரூபா. 2.3 பில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

கடன்கள்:

- ”என்ரபிறைஸ் ஸ்ரீலங்கா” திட்டத்தின் கீழ் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வட்டி மானியக் கோரிக்கைகள், கணக்காய்வுத் தடையின்மை பெற்ற பிறகு, 31/10/2025 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படுவதற்காக நிதியமைச்சகத்திற்கு அனுப்பப்படும்.
- ‘‘தியவர திரிய கடன் திட்டம்” நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வட்டி மானியம் செலுத்துவது தொடர்பாக, உதவிப் பொது முகாமையாளர் அபிவிருத்தி வங்கிப் பிரிவு மீன்வளம் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சகத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் பலமுறை விவாதம் நடத்தியும் எந்தப் பயனும் இல்லை. தற்போது, 2022 டிசம்பர் முதல் அமைச்சகம் மானியத்தைச் செலுத்துவதில்லை, ஏனெனில் செயல்படாத கடன்களுக்கும் அவர்கள் மானியம் செலுத்த வேண்டியுள்ளது. இந்தச் சிக்கலைப் பற்றி விவாதிக்க, 25/02/2025 அன்று, பிரதிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி வங்கி மற்றும் கிளைக் கடன் செயற்பாடுகள் - பகுதி 2), மீன்வளம் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சகத்தின் செயலாளருடன் ஒரு சந்திப்பைக் கோரினார், ஆனால் இன்றுவரை அமைச்சகம் கடிதத்திற்குப் பதிலளிக்கவில்லை.
- குறிப்பிட்ட அமைச்சகத்திடம் இருந்து பதில் வராததால், பிரதிப்

பொது முகாமையாளர் (அபிவிருத்தி வங்கி மற்றும் கிளைக் கடன் செயற்பாடுகள் - பகுதி 2), 24/10/2025 திகதியிட்ட கடிதம் மூலம் நிலுவையில் உள்ள மானியத் தொகையை உடனடியாகச் செலுத்துமாறு கோரியுள்ளார்.

- வட்டி இல்லா கல்வி கடனுக்கான வட்டி மானியம் 2025 யூலை வரை பெறப்பட்டுள்ளது.
- NCRCS வட்டி மானியம் 2024 இரண்டாம் பருவம் II க்கான தொகை மத்திய வங்கியால் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது.

1.6.2 செலுத்த வேண்டியவைகள்

<table>
<tr><th>கணக்காய்வு அவதானிப்பு</th><th>முகாமைத்துவ கருத்துரை</th><th>பரிந்துரை</th></tr>
<tr><td>பின்வரும் நீண்டகால செலுத்தவேண்டிய மீதிகள் அத்தகைய மீதிகளை தீர்ப்பதற்கு திருப்திகரமான நடவடிக்கை எடுக்காமல் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
<table>
<tr><th>GL கணக்கின் பெயர்</th><th>GL இல.</th><th>தொகை (ரூபா)</th><th>குறிப்புக்கள்</th></tr>
<tr><td>சேகரிக்கப் பட்ட கட்டண பெறுகை உறுதிச்சீட்டுக்கள்</td><td>22310082</td><td>108,082,023</td><td>மீதிகளின் வயதுப் பகுப்பாய்வு
<table>
<tr><th>மீதிகள்</th><th>2024.12.31 இல் உள்ளவாறான மீதி (ரூபா)</th><th>2023.12.31 இல் உள்ளவாறான மீதி (ரூபா)</th></tr>
<tr><td>5 ஆண்டுகளுக்கு மேல்</td><td>95,863,998</td><td>96,483,499</td></tr>
<tr><td>5 முதல் 2 ஆண்டுகள் வரை</td><td>1,571,649</td><td>3,958,352</td></tr>
<tr><td>2 முதல் 1 ஆண்டு வரை</td><td>339,034</td><td>1,092,287</td></tr>
<tr><td>1 ஆண்டிற்கும் குறைவானது</td><td>10,307,342</td><td>25,401,803</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>108,082,023</td><td>126,935,941</td></tr>
</table></td></tr>
</table></td>
<td><u>வசூலுக்காக அனுப்பப்பட்ட பற்றுச் சீட்டுகளின் வரவுகள்</u>

1 முதல் 5 வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிதியைக் கோரி எந்தவொரு வணிகரிடமிருந்தும் கோரிக்கைகள் எதுவும் பெறப்படவில்லை. மேலும், தொடர்ச்சியான சட்ட நடவடிக்கைகளின் காரணமாகத் தக்கவைக்கப்பட்டன. முகாமையுடன் நடந்த விவாதங்களின்படி, சட்டச் சிக்கல்கள் அல்லாத பிற பெறுகைகள் தற்செயல்</td>
<td>நீண்ட காலமாக நிலுவையில் உள்ள செலுத்த வேண்டிய நிலுவைகளைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td></td>
<td>மொத்த நிலுவைத் தொகை குறைந்திருந்தபோதிலும் மீளாய்வாண்டில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தொகைகள் தீர்க்கப்படாமல் உள்ளன.</td>
<td>கணக்கில் உள்ளடக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.</td>
</tr>
<tr>
<td>போலி காசோலை மற்றும் மோசடிகளுக்கான ஒதுக்கம்</td>
<td>22310122</td>
<td>1,755,943, 419</td>
<td>மீதியின் வயதுப் பகுப்பாய்வு.
<table>
<tr><th>மீதிகள்</th><th>2024.12.31 இல் உள்ளவாறான மீதி (ரூபா)</th><th>2023.12.31 இல் உள்ளவாறான மீதி (ரூபா)</th></tr>
<tr><td>More than 5 years</td><td>1,097,998, 002.97</td><td>1,001,922, 556.30</td></tr>
<tr><td>From 5-2 years</td><td>416,207, 518.65</td><td>62,306, 800.18</td></tr>
<tr><td>From 2 – 1 year</td><td>65,729, 903.20</td><td>476,301, 676.14</td></tr>
<tr><td>Less than 1 year</td><td>98,258, 992.23</td><td>69,207, 851.63</td></tr>
<tr><td>Total</td><td>1,755,943, 418.55</td><td>1,609,738, 884.25</td></tr>
</table>
மொத்த நிலுவைத் தொகை குறைந்திருந்தபோதிலும் 2024 ஆம் அண்டின் இறுதியில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தொகைகள் தீர்க்கப்படாமல் உள்ளன.</td>
<td>மேலும், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள அட்டை மையத்தின் நிலுவைகளைக் குறைப்பதற்காக வங்கி ஒரு உள் கொள்கையை வகுத்துள்ளது, மேலும் இது கருத்துகள் மற்றும் ஒப்புதலுக்காக திணைக்களங்களுடன் பகிரப்பட்டுள்ளது. அதன்படி, இறுதி செய்யப்பட்ட கொள்கை இயக்குநர்கள் சபையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படும்.</td>
</tr>
<tr>
<td>மொத்தம்</td>
<td></td>
<td>1,864,025, 442</td>
<td></td>
<td><u>போலியான காசோலை மற்றும் மோசடிகளுக்கான கையிருப்பு</u>
இது, அந்தந்த கிளைகளால் தவறான/போலியான ஆவணங்களுக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளையும் உள்ளடக்கியது. மீட்புச் செயல்முறை முடிந்தவுடன் (காப்பீட்டுக் கோரிக்கை பெறப்பட்டது / தள்ளுபடி செய்யப்பட்டது), செய்யப்பட்ட ஏற்பாடுகளை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எதிர்காலத்தில்</td>
</tr>
</table>

		இதுபோன்ற சம்பவங்களைத் தவிர்க்க வங்கி அவ்வப்போது தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது மற்றும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தொகைகளைத் தீர்ப்பதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.	

1.6.3 முற்பணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(i)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கம் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு (SOEs) சொந்தமான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதி ரூபா 966,071.52 மில்லியன் ஆகும். இது மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களில் இருந்து 39.66 சதவீதத்தையும் வங்கியின் மொத்த சொத்து பெறுமதியில் இருந்து 19.37 சதவீதத்தையும் குறிக்கிறது. வங்கியின் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக இந்த அரசாங்கத்தின் வெளிப்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1.46 சதவீதத்தால் சற்று அதிகரித்திருந்தது.	31.08.2025 அன்றைய நிலவரப்படி, அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களின் (SOEs) மீதான ஈடுபாடு வங்கியின் மொத்த கடன் மதிப்பில் 31.99% ஆக இருந்தது. இது 31.12.2024 உடன் ஒப்பிடுகையில் 7.67% சரிவை காட்டுகிறது. இது கடன் தொகுப்பு முறையாக நிர்வகிக்கப்படுவதைக் குறிக்கிறது. முதல் 10 SOEகள் நாட்டின் பொருளாதாரத்தை சீராக இயக்க வங்கி வசதி செய்து கொடுக்க வேண்டிய அத்தியாவசிய சேவை வழங்குநர்களை உள்ளடக்கியுள்ளன.	இலங்கை அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களின் கடன் வசதிகளின் மீள்அறவீடுகளை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டியுள்ளது.
(ii)	2024 டிசம்பர் 31 அன்றைய நிலவரப்படி, இலங்கை அரசாங்கம் , வீதி அபிவிருத்தி அதிகாரசபை , ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் லிமிடெட் , சிலோன் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் , தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை , இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை , லங்கா கோல் கம்பனி (தனியார்) லிமிடெட் , அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் , ஓய்வூதியத் திணைக்களம் , மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியன முதல் 10 அரச நிறுவனங்களாக (SOEs) அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த முதல் 10 அரச	இந்த 10 பெரிய SOEகளுக்கும் நேரடியாக நிதி வழங்கப்படவில்லை. இது ஒரு கட்டண முறை மட்டுமேயென்பதுடன் மேலும் வசதித் தீர்வுகள் திறைசேரியால் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றன. 30.06.2025 அன்றைய	மீள்அறவீடுகளைத் தொடர்ந்து கண்காணிப்பதும், கடன் அபாயத்தைக் குறைப்பதற்காகப் பொருத்தமான வரம்புகளைப் பேணுவதும் அவசியமாகின்றது.

நிறுவனங்களின் (SOEs) திரட்டப்பட்ட மூலதன நிலுவைத் தொகை 2024 டிசம்பர் 31 அன்றைய நிலவரப்படி ரூபா. 855,639.30 மில்லியன் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களுக்கு (SOEs) சொந்தமான கடன்கள் மற்றும் முன்பணங்களின் மொத்த நிலுவைத் தொகையில் 92.14 சதவீதத்தைக் குறிக்கிறது. எனவே, இந்த முக்கியப் பத்து அரச நிறுவன வாடிக்கையாளர்கள் மீதான பெரும் சார்புநிலை காணப்படுகிறது.

நிறுவனம்	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி ரூபா. மில்லியன்	பிணை	பிணை பெறுமதி
இலங்கை அரசாங்கம் (USD வசதி)	463,844.91	நிபந்தனையற்றது	
வீதி அபிவிருத்தி அதிகாரசபை	115,567.80	திறைசேரி உத்தரவாதம்	ரூபா.148,759.33 மில்லியன்
லங்கன் ஏயர் லைன்ஸ் லிமிடெட்	66,581.24	திறைசேரி உத்தரவாதம்	யூஎஸ்டி 5 மில்லியன்
		ஆறுதல் கடிதம்	ரூபா.12,900 மில்லியன் யூஎஸ்டி 100 மில்லியன்
		ஸ்ரீ லங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சாதாரண பங்குகள் மீதான அடமானம் மாற்றுப் பட்டியல் மற்றும் நகர்வு ஆவணங்கள்	யூஎஸ்டி 186 மில்லியன்
சிலோன் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	56,391.52	திறைசேரி இழப்பீடு	ரூபா.100,000 மில்லியன்
தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	41,300.55	திறைசேரி உத்தரவாதம்	ரூபா.33,186.52 மில்லியன் யூஎஸ்டி 73.07 மில்லியன்
		மாற்றுப் பட்டியல் மற்றும் நகர்வு ஆவணங்கள்	

நிலவரப்படி, இலங்கை அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களின் மொத்த ஈடுபாடு வங்கியின் மொத்த கடன் மதிப்பில் 32.06% ஆக உள்ளது.

வங்கி, பணப்புழக்கம் மற்றும் திருப்பிச் செலுத்தும் திறனை மதிப்பிடுவதன் மூலம் நிதி ரீதியாகச் சாத்தியமான SOEகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

		நிலையான வைப்பு/ காசு எல்லை	
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை	29,357.42	நிலையான வைப்புக்கள் மாற்றுப் பட்டியல் மற்றும் நகர்வு ஆவணங்கள்	ரூபா.29.52 மில்லியன்
லங்கா கோல் கம்பனி (பிறைவெட்) லிமிடெட்	25,692.05	திறைசேரி உத்தரவாதம்	ரூபா.50,000 மில்லியன்
அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம	21,215.92	மாற்றுப் பட்டியல் மற்றும் நகர்வு ஆவணங்கள் நிபந்தனை யற்றது பாதீட்டு ஒதுக்கீட்டுடனான ஆறுதல் கடிதம்	100%
ஓய்வூதியத் திணைக்களம்	19,445.14	நிபந்தனை யற்றது	
இலங்கை மின்சார சபை	16,242.75	திறைசேரி உத்தரவாதம் மற்றும் நிபற்தனை யற்றது.	ரூபா.4,540 மில்லியன்
மொத்தம்	**855,639.30**		

(iii) கடந்த 5 வருட காலப்பகுதியில் வங்கியின் முதல் 10 செயலிழந்த வாடிக்கையாளர்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதில், பின்வரும் வாடிக்கையாளர்கள் கடந்த 5 வருடங்களில் அதிகபட்ச செயலிழப்புடன் காணப்படுகின்றனர் என்பது தெரியவந்துள்ளது. அதன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வாடிக்கையாளரின் பெயர்	**மொத்த செயற்பாடற்ற கடன் மீதி (2024/12/31) (ரூபா. மில்லியன்)**
நாறதோ அக்றோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்	6,923.22
தெற்காசிய தொழில்நுட்ப நிறுவகம்	5,039.62
ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்	4,894.57

2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு கொவிட்-19 தொற்றுநோய் பரவல், பேரியல் பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்ட பாதகமான மாற்றங்கள் மற்றும் வரித் திருத்தங்களின் தாக்கம் காரணமாக ’நிலை 03 க்கு புதிய இடமாற்றங்கள் அதிகரித்துள்ளன. இதனால், பெரும்பாலான துறைகளால் அவற்றின் அதிகபட்ச திறனுடன் செயல்பட முடியவில்லை. மேலும், அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, அங்கீகாரம் பெற்ற வங்கிகள் 31.03.2025

வருங்காலத்தில் கடன் வழங்குவதற்கு முன்னர் மீள்அறவீடுகளைத் தொடர்ந்து கண்காணிப்பதும், திருப்திகரமான வாடிக்கையாளர் கடன் மதிப்பீட்டை உறுதிப்படுத்துவதும் அவசியம்.

தோலியா இன்வெஸ்ட்மென்ட்	4,864.64
மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்	4,815.93
டபிள்யூ எம் மென்டிஸ் & கம்பனி லிமிட்டட்	4,654.23
டபிள்யூ எம் மென்டிஸ் & கம்பனி லிமிட்டட்	4,644,.16
மல்கவான எகோ றிசோர்ட் லிமிட்டட்	4,351.14
கடுவெல கோல்டிங்ஸ்	3,057.07
ஹிங்குறான அக்றோ பிறைவேட லிமிட்டட்	3,005.84
மொத்தம்	**46,250.42**
முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முக்கிய 10 NPL மீதியின் அதிகரிப்பு (ரூபா.மில்லியன்)	8,857.02
முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முக்கிய 10 NPL மீதியின் அதிகரிப்பின் சதவீதம் (%) (ரூபா.மில்லியன்)	23.69%

- 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, முதல் 10 செயலிழந்த வாடிக்கையாளர்களின் திரட்டப்பட்ட நிலுவைத் தொகை ரூபா. 46,250.42 மில்லியன் ஆகும். இது முந்தைய ஆண்டை விட ரூபா. 8,857 மில்லியன் அல்லது 23.69 சதவீதம் அதிகரிப்பைக் காட்டுகிறது.இந்தத் திரட்டப்பட்ட நிலுவைத் தொகை, 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, வங்கியின் 'நிலை III மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களில்' 12.41 சதவீதத்தைக் குறிக்கிறது.
- 2024 டிசம்பர் 31 நிலவரப்படி முதல் 10 செயலிழந்த வாடிக்கையாளர்களின் திரட்டப்பட்ட நிலுவை 136.09 சதவீதம் அல்லது ரூபா. 26,660.04 மில்லியன் அதிகரித்துள்ளது.

வரை செயலிழந்த முன்பணங்களுக்கான பறாதே நிறைவேற்றத்தை இடைநிறுத்தும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன. இது சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் நிலுவைத் தொகையை மீட்கும் செயல்பாட்டைப் பாதகமாகப் பாதிக்கிறது. எனினும், வங்கியின் சொத்துத் தரத்தை வலுப்படுத்தும் அதே வேளையில் நிலை III' தொகையைக் குறைப்பதற்காக, மீட்புக் கூட்டுப்பிரிவு தொடர்ந்து பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

1. துணைப் பொது முகாமையாளர் (மீட்புக் கூட்டுப்பிரிவு) மற்றும் மீட்புக் குழுவினர், வணிக அலகுகளின் ஒவ்வொரு உறவுமுறைக் குழுவுடனும் மாதாந்திர தனிப்பட்ட சந்திப்புகளை நடத்துதல், குறிப்பாக கண்காணிப்புப் பட்டியலில் உள்ள சாத்தியமான வாடிக்கையாளர்களுக்கு கவனம் செலுத்தி, ஒப்புக் கொள்ளப்பட்ட சீரமைக்கும் உத்திகளைப் பின்பற்றுதல்.
2. கடன் குழுவிடம் மாதாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

- கடன் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் NPCF க்கு மாற்றப்பட்ட வசதிகளின் விவரங்கள்.

- கூட்டு நிறுவனப் பிரிவின் கண்காணிப்புப் பட்டியலில் உள்ள நிறுவனங்களின் கடன் அபாயத்தைக் குறைக்க எடுக்கப்பட வேண்டிய சீரமைப்பு நடவடிக்கைகள்.

3. ஒவ்வொரு வணிக அலகிலும் உள்ள முக்கிய NPCF மற்றும் கண்காணிப்புப் பட்டியலில் உள்ள வசதிகளை உள்ளடக்கி, பிரதான இடர் அதிகாரியால் தலைமை தாங்கப்படும் NPA மீளாய்வுக் கூட்டங்களை வாராந்திர அடிப்படையில் நடத்துதல்.
4. தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தலை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு வணிக அலகிலும் உள்ள முதல் செயலிழந்த வாடிக்கையாளர்களுக்கு, பின்வருமாறு வகைப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட தனிப்பயனாக்கப்பட்ட மீட்புத் திட்டத்தை உருவாக்குதல்

- தொடர்ந்து நடைபெற்று வரும் சட்டரீதியான வழக்குகள்.
- மறுசீரமைப்பு/ மறு அட்டவணைப்படுத்தல் மூலம் உயிர்ப்பிக்க/ மீட்க சாத்தியமுள்ள வாடிக்கையாளர்கள்.

(iv) மீளாய்வாண்டில் கட்டணம் செலுத்தத் தவறியதன் காரணமாக இருபது பெருநிறுவன வாடிக்கையாளர்கள் செயலிழந்த வாடிக்கையாளர்களாகப் பெருநிறுவன மீட்புப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர். 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, இந்த வாடிக்கையாளர்களின் திரட்டப்பட்ட மூலதன நிலுவைத் தொகை ரூபா. 15,195.37 மில்லியன் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வாடிக்கையாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வில் பின்வரும் அவதானிப்புகள் வெளியாகியுள்ளன.

அ)வொய்ஸ் ஒவ் ஏசியா நெற்வேக் (பிறைவெட்) லிமிட்டட் 2006 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட வொய்ஸ் ஒவ் ஏசியா நெற்வேக் (பிறைவெட்) லிமிட்டட் ஆனது ரியல் ரேடியோ மற்றும் சியாத எ/ப்எம் போன்ற வானொலி நிலையங்கள் மற்றும் சியாத டிவி மற்றும் வர்ணம் டிவி போன்ற தொலைக்காட்சி சேனல்கள் உட்பட பல்வேறு ஊடக சேனல்களை இயக்குகிறது. ரூபா. 200 மில்லியன் மிகைப்பற்று, ரூபா. 70 மில்லியன் குறுகிய காலக் கடன் மற்றும் தவணைக் கடனின் மூலதன நிலுவையில் ரூபா. 28.5 மில்லியன் ஆகியவற்றைத் தீர்ப்பதற்காக, 2019 நவம்பர் இல் இந்நிறுவனத்திற்கு ரூபா. 298.5 மில்லியன் கடன் வழங்கப்பட்டது. இருப்பினும், நிலையான திருப்பிச் செலுத்துதலில் தவறியதன் காரணமாக, இக்கடன் 2023 நவம்பர் இல் செயலிழக்கப்பட்டதாக வகைப்படுத்தப்பட்டது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன: 1. 2018 பெப்ரவரி 21 திகதியிட்ட மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் ரூபா. 275 மில்லியன் மதிப்புள்ள நிலையான சொத்து மீதான முதன்மை அடமானம் மூலம் கடன் பாதுகாக்கப்பட்டு இருந்தது. இருப்பினும், நிலுவையில் உள்ள கடனின் தொகை பிணையின் கட்டாய விற்பனை மதிப்பு (FSV) கடன், வட்டி மற்றும் பிற நிலுவைத் தொகையை முழுமையாக ஈடுகட்ட போதுமானதாக இல்லை என்பதைக் குறித்து 2025 சனவரி அளவில் ரூபா. 431.14 மில்லியனாக அதிகரித்திருந்தது.இந்தக் கடன் முரண்பாடு, கடன் அனுமதிக்கும் நேரத்தில் பிணையை போதுமான அளவு மதிப்பிடத் தவறியதைக் குறிக்கிறது.	1. வொய்ஸ் ஒவ் ஏசியா நெற்வேக் (பிறைவெட்) லிமிட்டடிற்கு மறுசீரமைக்கப்பட்ட கடன் ரூபா. 298.5 மில்லியன் மற்றும் மறு அட்டவணைப்படுத்தப்பட்ட கடன் ரூபா. 1.5 மில்லியன் ஆகியவற்றை வழங்குவதற்கும், மறுசீரமைக்கப்பட்ட/மறு அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்களுக்கான முன்பண விகிதத்தை தீர்மானிக்கும்போது, குழு மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பில் 100% ஐ கருத்தில் கொள்வதற்கும் 17.10.2019 அன்று நடைபெற்ற கடன் குழுவின் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. சொத்தின் மதிப்பு அதிகரித்ததன் அடிப்படையில், குழு மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பில் 100% கருத்தில் கொள்ளப்பட்டது. சொத்தின் மதிப்பு 2018 இல் ரூபா. 490 மில்லியனில் இருந்து 2022 இல் ரூபா. 575 மில்லியனாக அதிகரித்திருந்தது. 2019க்குப் பிறகு, பொருளாதார நெருக்கடி காரணமாக, கம்பனி ஒப்புக்கொண்டபடி கடன்	எதிர்காலத்தில் தவறுதல்களைக் குறைப்பதற்கு, கடன் அனுமதிச் செயல்முறையின் போது வாடிக்கையாளரின் உரிய விடாமுயற்சி மற்றும் கடன் தகுதி மதிப்பீடுகளை மேம்படுத்துவதன் மூலம், வங்கியின் நிறுவப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி தகுதியான வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், மேலும் கடுமையான கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். வங்கியின் மீட்பு முயற்சிகளை விரைவுபடுத்துமாறும் மேலும் பரிந்துரைக்கப்படுகிறது.

வசதிகளுக்குச் சேவை செய்யத் தவறியது. இதன் விளைவாக மறு அட்டவணைப்படுத்தப்பட்ட தவணைக் கடன்களுக்கான வட்டி திரட்டப்பட்டது.

2. வங்கியின் கடன் கொள்கையின்படி தேவைப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்குவதை சரிபார்க்க, கடன் குறித்த அவசியமான வருடாந்திர மீளாய்வுகளை வங்கி மேற்கொள்ளத் தவறியுள்ளது. மேலும், பிரச்சினைகளை முன்கூட்டியே கண்டறிவதற்கு அத்தியாவசியமான பயனுள்ள கடன் கண்காணிப்பு நடைமுறைகளை வங்கி செயல்படுத்தவில்லை. கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நிறுவனத்தின் வணிக வருமானத்தில் 30 சதவீதம் (பின்னர் 50% ஆக திருத்தப்பட்டது) அதன் பெருநிறுவனக் கிளை மூலம் வழிப்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை வங்கி நிறைவேற்றவில்லை. பெருநிறுவனக் கிளை மூலம் வழிப்படுத்தப்பட்ட பரிவர்த்தனைகள் இந்தக் குறிப்பிட்ட தொகையை விட குறைவாக இருந்தன, இது கடன் ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகளுக்கு இணங்காததைக் காட்டுகிறது.

கடன் வழங்கும் செயல்முறையில், உள்ளகக் கொள்கைகள், சட்டத் தேவைகள் மற்றும் இடர் மேலாண்மை நடைமுறைகளைப் பின்பற்றுவதில் உள்ள குறைபாடுகள் போன்ற குறிப்பிடத்தக்க தவறுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இந்தக் குறைபாடுகள், கடனை முழுமையாக மீட்டெடுக்க முடியாத ஒரு சூழ்நிலைக்கு வழிவகுக்கின்றன. இந்தக் குறைபாடுகள், கடன் கொள்கைகளை மேலும் கடுமையாக அமல்படுத்துதல், சிறந்த கண்காணிப்பு மற்றும் கடன்களைப் பாதுகாப்பதில் மிகவும் ஆழமான உரிய விடாமுயற்சியின் தேவையை வலியுறுத்துகின்றன.

2.நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வசதிகள் மறுசீரமைக்கப்பட்டபோதும், கால அவகாச வசதிகள் முன்மொழியப்பட்டபோதும் அவை மீளாய்வு செய்யப்பட்டன.

நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வசதிகளைத் தீர்ப்பதற்கு வாடிக்கையாளருடன் தொடர்ச்சியான நினைவூட்டல் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் சந்திப்புகள் அனுப்பப்பட்டன/நடத்தப்பட்டன. போதுமான பணப்புழக்கத்தை வங்கியின் மூலம் வழிப்படுத்துமாறு வாடிக்கையாளருக்குத் தொடர்ச்சியான கோரிக்கைகள்/நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டன. இருப்பினும், வங்கியின் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான பணப்புழக்கத்தை மட்டுமே நிறுவனம் எமது கணக்கு மூலம் வழிப்படுத்தியது.
எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகள்:
வொய்ஸ் ஒவ் ஏசியா நெற்வேக் (பிறைவெட்) லிமிட்டடிற்கு வழங்கப்பட்ட வசதிகளை மறு அட்டவணைப்படுத்துவதற்கு 02.05.2025 அன்று கடன் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது, அதற்கான ஆவணங்கள் தற்போது

செயலாக்கத்தில் உள்ளன.

ஆ) மல்கவான எகோ றிசோர்ட் லிமிட்டட்

மல்கவான எகோ றிசோர்ட் லிமிட்டட் என்பது கோகலாவில் 5 நட்சத்திர ஆடம்பர ஓய்வு விடுதியைக் கட்டும் ஒரு குடும்ப நிறுவனமாகும். இது கடுமையான நிதிச் சிக்கல்களை எதிர்கொண்டது. 2015-2017 காலகட்டத்தில் பெறப்பட்ட கடன்கள், மிகைப்பற்றுகள் மற்றும் உத்தரவாதக் கடிதம் உட்பட, 2025 மே நிலவரப்படி, ரூபா.4,413.63 மில்லியன் திரட்டப்பட்ட நிலுவைத் தொகையுடன் பல செயலிழந்த கடன்களை (NPL) இந்நிறுவனம் கொண்டிருந்தது. 10 ஆண்டுகளுக்கும் மேலாக தாமதமாகியுள்ள திட்டத்திலிருந்து பணப்புழக்கத்தை உருவாக்க இயலாமை முக்கியமாக பங்கு மூலதனப் பங்களிப்பைச் சந்திப்பதில் உள்ள சவால்கள் மற்றும் மோசமான நிதிச் செயல்திறன் காரணமாக ஆகியவற்றால், சலுகைக் கால நீட்டிப்புகள், கடன் மறுசீரமைப்பு மற்றும் மறு அட்டவணைப்படுத்தலுக்காக நிறுவனம் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன:

1. கடன் வசதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான தீ அபாய காப்பீட்டைப் புதுப்பிப்பதை வங்கி உறுதிப்படுத்தத் தவறியது.

2. கம்பனி அனைத்து வணிக நடவடிக்கைகளையும் நியமிக்கப்பட்ட பெருநிறுவனக் கணக்கு மூலம் வழிநடத்துவதை உறுதிசெய்யத் தவறியதுடன், நிறுவனத்திடமிருந்து தொடர்ச்சியான கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களைப் பெறவும் வங்கி தவறிவிட்டது.

3. நிறுவனத்தின் மற்றும் இயக்குநர்களின் மோசமான கடன் நிலை இருந்தபோதிலும், ஒரு இயக்குநருக்கு சர்வதேச பெருநிறுவனக் கடன் அட்டை வழங்கப்பட்டது. வங்கியின் சொந்தக் கொள்கைகளைப் பின்பற்றுவதில் உள்ள இந்தக் குறைபாடுகள், நிறுவனத்தின் தொடர்ச்சியான நிதி ஸ்திரமின்மையுடன் சேர்ந்து, மல்கவான எகோ

1. வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கான தீ காப்பீட்டுக் கொள்கை ரூபா. 1,665,110,012 க்கு பெறப்பட்டதுடன், அது 12.12.2019 வரை நடைமுறையில் இருந்தது.

2.கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் (MERL) 31.03.2019 வரை உள்ளது, மேலும் முகாமைத்துவக் கணக்குகள் 2019/20 நிதியாண்டுக்குக் கிடைக்கின்றன ஓய்வு விடுதியின் வணிகச் செயல்பாடுகள் இன்னும் தொடங்கப்படவில்லை. எனவே, வணிகப் பணப்புழக்கங்கள் இல்லை. இருப்பினும், கட்டுமானக் காலத்தின் அனைத்து பரிவர்த்தனைகளும் இலங்கை வங்கியின் நடப்புக் கணக்கு மூலம் வழிப்படுத்தப்பட்டன.

3. இந்த பெருநிறுவனக் கடன் அட்டை, சதோன் குறூப் ரீ இன்டஸ்ரிஸ் (பிறைவேட்) லிமிட்டட், சதேன் குறூப் சீரீசீ ரீ

